Eastern University, Sri Lanka

Faculty of Commerce and Management

External Degree

Part I Examination in Business Administration / Commerce - 2000 / 2001 (June/July 2007) (Repeat)

BBA / COM 202 Advanced Financial Accounting I

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

கணித்தற் பொறி அனுமதிக்கப்பட்டுள்ளது. நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

1. 31.12.2006 இல் உள்ளவாறான X கம்பனியினதும் Y கம்பனியினதும் ஐந்தொகைகள் பின்வருமாறு:

| | X கம்பனி | Y கம்பனி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 200000 | 150000 |
| 9% முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 100000 | ------- |
| 8% தொகுதிக் கடன்கள் | 60000 | 100000 |
| இலாப நட்டக் கணக்கு | 120000 | 75000 |
| கடன்கொடுத்தோர் | 120000 | 145000 |
| | **600000** | **450000** |
| காணி கட்டடம் | 230000 | 200000 |
| தளபாடமும் பொருத்திகளும் | 100000 | 70000 |
| இருப்புக்கள் | 90000 | 50000 |
| கடன்பட்டோர் | 110000 | 90000 |
| காசும் வங்கியும | 70000 | 40000 |
| | **600000** | **450000** |

01.01.2007 இல் X கம்பனியானது Y கம்பனியை பின்வரும் நிபந்தனைகளின் கீழ் ஈர்ப்பு செய்தது.

1. Y கம்பனியின் தொகுதிக்கடன்காரருக்கு X கம்பனியின் ஒவ்வொன்றும் ரூபா. 10 பெறுமதியான 10000 9% முன்னுரிமை பங்குகளை முக விலையில் வழங்குதல்.

2. Y கம்பனியின் சாதாரண பங்குதாரருக்கு பங்கு ஒன்றிக்கு X கம்பன ஒவ்வொன்றும் ரூபா. 10 வான ஒரு சாதாரண பங்கினை பங்கு ஒன்று ரூபா. விலையில் வழங்குதல்

3. Y கம்பனியின் சொத்துக்களும் ( காசு மற்றும் வங்கி மீதியைத் தவிர) பொறுப்புக்க பின்வரும் பெறுமதியில் X கம்பனியால் கையேற்கப்பட்டன.

| | ரூபா |
|---|---|
| காணி கட்டடம் | 250000 |
| தளபாடம் பொருத்திகள் | 60000 |
| இருப்புக்கள் | 45000 |
| கடன்பட்டோர் | 85000 |
| கடன்கொடுத்தோர் | 135000 |

4. கலைப்புச் செலவு ரூ.10000 Y கம்பனியால் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது.**

i. Y கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய கொள்வனவு மதிமானத்தினைக் கணி செய்க.

ii. Y கம்பனியின் கணக்கேடுகளை மூடுவதற்கான பொருத்தமான பே கணக்குகளைத் தயாரிக்குக.

iii. X கம்பனியின் ஏடுகளில் Y கம்பனியின் கொள்வனவு தொடர்பான நாட் பதிவுகளை எழுதுக.

**(25 புள்**

31.12.2006 இல் உள்ளவாறான ABC கம்பனியின் ஐந்தொகை பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 200000 |
| 8% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு மூலதனம் (ஒவ். ரூ.10 வானவை) | 400000 |
| பங்கு வட்டம் | 40000 |
| இலாப நட்டக் கணக்கு | 80000 |
| பொது ஒதுக்கம் | 200000 |
| கடன்கொடுத்தோர் | 80000 |
| | **1000000** |
| காணி கட்டடம் | 250000 |
| தளபாடமும் பொருத்திகளும் | 150000 |
| முதலீடுகள் | 250000 |
| இருப்புக்கள் | 100000 |
| கடன்பட்டோர் | 50000 |
| காசும் வங்கியும் | 200000 |
| | **1000000** |

8% மீட்கத்தக்க முன்னுரிமை பங்குகள் அனைத்தும் 01.01.2007 இல் மீட்கப்பட்டன. ரூ.200000 பெறுமதியான முதலீடுகள் கொள்விலையுடன் 10% கூட்டிய விலையில் விற்கப்பட்டன. மீட்புக்கு கிடைக்கத்தக்க வருமான ஒதுக்கங்களை எல்லாவற்றையும் பயன்படுத்திய பின்னர் மிகுதிக்கு போதுமான அளவு புதிய சாதாரண பங்குகள் வழங்கப்பட்டன. முன்னுரிமைப் பங்குதாரருக்குரிய கொடுப்பனவுகள் யாவும் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

**வேண்டப்படுவது :**

பின்வருவனவற்றைத் தயாரிக்குக:

1. 8% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு கணக்கு
2. 8% மீட்கத்தக்க முன்னுரிமை பங்கு மீட்புக் கணக்கு
3. மூலதன மீட்பு ஒதுக்கக் கணக்கு
4. வங்கிக் கணக்கு
5. முதலீட்டுக் கணக்கு
6. இலாப நட்டக் கணக்கு
7. பொது ஒதுக்கக் கணக்கு
8. பங்கு வட்டக் கணக்கு
9. முன்னுரிமை பங்கு மீட்பின் பின்னரான ஐந்தொகை

(25 புள்ளிகள்)

3. TVS ட்ரவல்ஸ் கம்பனியானது TATA மோட்டர்ஸ் கம்பனியிடமிருந்து வாடகை கொள்வனவு முறையின் கீழ் மோட்டார் வாகனம் ஒன்றை 1.1.2003 இல் கொள்வன செய்தது. வாடகைக் கொள்வனவு ஒப்பந்தத்தின் படி ரூபா. 200000 உடன் காசாசை 31.12.2003 இலிருந்து தொடங்கும் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் ரூபா.1898 வருடாந்த தவணைக் கட்டணத்தை மூன்று ஆண்டுகளுக்கு செலுத்துத்துதல் வேண்டு வாடகைக் கொள்வனவு வட்டி வீதம் ஆண்டுக்கு 20% ஆகும். மோட்டார் வாகனத்தின் க விலை ரூபா.600000.

**வேண்டப்படுவது :**

1. வாடகைக் கொள்வனவு மொத்த வட்டி எவ்வளவு?
2. மோட்டார் வாகனத்தின் வாடகைக் கொள்வனவு விலை என்ன?
3. 2003, 2004, 2005 ஆண்டுகளுக்கு வாடகை கொள்வனவாளரின் ஏட்டில் பின்வ கணக்குகளைத் தயாரிக்குக.

    i. மோட்டார் வாகனக் கணக்கு

    ii. TATA மோட்டர்ஸ் கம்பனிக் கணக்கு

    iii. வாடகை கொள்வனவு வட்டிக் கணக்கு

**(25 புள்ளி**

4. A கம்பனியினதும் அதன் உப கம்பனியாகிய B கம்பனியிதுனம் 31.12.2006 இல் உள்ளவாறான ஐந்தொகைகள் பின்வருமாறு :

| பொறுப்புக்கள் | A கம்பனி | B கம்பனி |
|---|---|---|
| பங்கு மூலதனம்(பங்கு ஒன்று ரூ.10) | 200000 | 100000 |
| பொது ஒதுக்கம் | 30000 | 20000 |
| இலாப நட்டக் கணக்கு | 50000 | 30000 |
| கடன் கொடுத்தோர் | 50000 | 20000 |
| | **330000** | **170000** |
| சொத்துக்கள் | | |
| இறையில் ஆதனம் (கிரயத்தில்) | 150000 | 100000 |
| பொறி இயந்திரம் | 50000 | 30000 |
| B கம்பனியின் 8000 பங்குகளின் முதலீடு | 90000 | -------- |
| இருப்புக்கள் | 20000 | 20000 |
| கடன்பட்டோர் | 10000 | 15000 |
| வங்கி மீதி | 10000 | 5000 |
| | **330000** | **170000** |

**மேலதிக தகவல்கள் :**

i. 01.01.2006 இல் A கம்பனியானது B கம்பனியின் 8000 சாதாரண பங்குகளை கொள்வனவு செய்தது. அத் திகதியில் B கம்பனியின் பொது ஒதுக்கக் கணக்கில் ரூ.10000 வும் இலாபநட்டக் கணக்கில் ரூ.15000 செலவு மீதியும் காணப்பட்டன.

ii. B கம்பனியின் கடன்பட்டோர் A கம்பனியிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 5000 வை உள்ளடக்கியுள்ளது.

**வேண்டப்படுவது :**

31.12.2006 இல் உள்ளவாறான திரட்டிய ஐந்தொகையைத் தயாரிக்குக.

(25 புள்ளிகள்)